**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

CC **.No.** 65/2026

**2026 – ம் ஆண்டு ஜுன் மாதம் 09–ம் தேதி செவ்வாய்க்கிழமை அ.சா. 1– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N. ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**அ.சா.** : 1

**பெயர்** : **லாவண்யா** **தொழில்** : **குடும்ப தலைவி**

**க/பெ.** : **சிவா** **வட்டம்** : அரியலூர்

**கிராமம்** : வீ. கைகாட்டி **வயது** : 30

<u>09.06.2026</u>

**( எதிரி ஆஜர் )**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது வீ. கைகாட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் குடும்ப தலைவியாக இருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சர்வானந்தம் எனது அப்பா. 04.11.2024 அன்று Tn–61 J–1275 பதிவு எண் கொண்ட TVS XL இருசக்கர வாகனத்தில் கைகாட்டிக்கு சொந்த வேலையாக சென்று மீண்டும் அரியலூர் நோக்கி என் அப்பா சர்வானந்தம் வந்து கொண்டிருந்தபோது காட்டுப்பிரிங்கியம் பஸ்டாப் அருகில் இடது புறமாக ஓரமாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி என் அப்பா சென்றார். அவருக்கு பின்னால் வந்த Honda shine வாகனத்தை ஓட்டிய அஜெய் என்கிற பையன் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து மோதி என் அப்பா கீழே விழுந்து நெஞ்சு பகுதியிலும் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. Honda shine வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. அருகில் இருந்தவர்கள் என் அப்பா செல்போனை எடுத்து எனக்கு தகவல் சொன்னார்கள். என்அக்காவுக்கு பாம்பு கடித்து அவரை

பார்த்துக்கொள்வதற்காக என் தம்பி சூர்யா அரியலூர் அரசு மருத்துவமனையில் இருந்ததால் நான் என் தம்பிக்கு போன் செய்து அப்பாவுக்கு விபத்து நடந்ததை பற்றி கூறினேன். நான் செல்வதற்குள் என் தம்பி என் அப்பாவை மருத்துவமனையில் சேர்த்துவிட்டார். 05.11.2024 அன்று அதிகாலை மேல் சிகிச்சைக்காக என் அப்பாவை தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். 3 நாள் சிகிச்சையில் இருந்த என் அப்பா இறந்துவிட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நீதிமன்ற முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளைதான் போலீசார் விசாணையிலும் கூறினேன் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் என் அப்பாவுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் எங்கு வைத்து போலீசார் வாங்கினார்கள் என்றால் தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்பதை படித்து காண்பித்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். விபத்து நடந்த சமயத்தில் என் அப்பா தலை கவசம் அணியவில்லை என்றால் சரிதான். என் அப்பாவுக்கு விபத்து நடந்தது பற்றி யார் எனக்கு போன் செய்து சொன்னார்கள் என்று போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தது எத்தனை மணி என்றால் இரவு சுமார் 08.45 மணி. அரியலூர் – வீ.கைகாட்டி சாலை அகலமான சாலை என்றால் ரொம்பவும் அகலம் இல்லை. அந்த சாலையில் மையின்சுக்கு செல்லும் கனரக வாகனங்கள் செல்லும் என்றால் சரிதான். எனது அப்பா ஓட்டி சென்ற XL வாகனம் வெளிச்சம் குறைவான

வாகனம் என்றால் சரிதான். என் அப்பா இறக்கும்போது அவருக்கு 60, 65 வயது இருக்குமா என்றால் அப்போது அவருக்கு 63 ஆகும். வயதானவர் என்பதால் என் அப்பாவுக்கு கண் பார்வை திறன் குறைவாக இருக்கும் என்றால் இல்லை. என் அப்பாவுக்கு எப்போதாவது மது குடிக்கும் பழக்கம் உள்ளதா என்றால் இருந்தது. சம்பவம் நடந்து 3 நாட்கள் சிகிச்சையில் இருந்த பிறகுதான் என் அப்பா இறந்தார் என்றால் சரிதான். போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2 முறை விசாரித்தார்கள். முதலில் என் அப்பா தஞ்சாவூர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோதும் பின்னர் என் அப்பா இறந்தபிறகும் விசாரித்தார்கள். விபத்து நடந்தவுடன் 108 மூலமாக என் அப்பாவை அரியலூர் அரசு மருத்துமனையில்தான் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றால் சரிதான். அரியலூர் அரசு மருத்துவமனையில் என் அப்பா சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தது சம்மந்தமாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். போன் மூலமாகதான் தகவல் வந்தது என்றால் சரிதான். தகவல் கேட்டு நான் எங்கு சென்றேன் என்றால் அரியலூர் அரசு மருத்துவமனைக்குதான் சென்றேன். சம்பவ இடத்திற்கு நான் சென்றேனா என்றால் இல்லை. என் அப்பா 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தபோது போலீசாரிடம் வாக்குமூலம் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் என் அப்பா மது போதையில் சாலை விதிகளை பின்பற்றாமல் சென்றதால்தான் அவருக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.